T.C.043

018/DM/26

Register Number									

DEPARTMENTAL EXAMINATIONS

GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I – GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

I. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி : **(6 × 4 = 24)**

1. தேவநேயப்பாவாணரின் தமிழ்ச்சொல் வளம் குறித்து விளக்கியுரைத்தவை எவை?

2. உயிரளபெடை என்றால் என்ன?

3. அன்மொழித்தொகை என்றால் என்ன? (எ.கா.) விளக்குக.

4. செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள் குறித்து எழுதுக.

5. இலக்கியங்கள் எவ்வாறு அமைகின்றன?

6. அறிவியலின் வளர்ச்சி நிலையைக் குறித்த ஸ்டீபன் ஹாக்கிங்கின் கருத்து யாது?

7. வழு, வழாநிலை குறித்த இலக்கண வேறுபாடு அறிக.

8. மொழிபெயர்ப்பின் பயன்பாட்டினை எழுதுக.

II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி : **(6 × 6 = 36)**

9. வினாவின் வகைகளை (எ.கா.) விளக்குக.

10. தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

11. பெரிய புராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

12. ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

13. இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

[Turn over

14. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

15. வினையாலணையும் பெயரை விளக்கி, தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி : **(4 × 10 = 40)**

16. ஜெயகாந்தனின் 'தர்க்கத்திற்கு அப்பால்' என்னும் சிறுகதையினை கதைமாந்தர் வாயிலாக தொகுத்து எழுதுக.

17. ஐம்பெருங்குழு, எண்பேராயத்தில் இடம்பெற்றவர்கள் யாவர்? விளக்குக.

18. திருக்குறள் பற்றிய சில ஆராய்ச்சிச் செய்திகளை எழுதுக.

19. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

20. பாரதியின் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக :

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?

– பாரதியார்